**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி. P. கனிமொழி , L. L. M.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிபதி, தரங்கம்பாடி
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15 ம் நாள் புதன் கிழமை
திருவள்ளுவராண்டு 2057, பராபவ வருடம் சித்திரை மாதம் 02 ம் நாள்

TNMY09-001265-2019

**OS.No.168/2019**

சமூகம் கோர்ட் இலாக்காவிற்குட்பட்ட, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமம், பெருமாள்கோவில் 2ம் தெருவில் வசித்து வரும் (லேட்) கண்ணன் மனைவி 49 வயதுள்ள செல்வி. .....வாதி

//எதிர்//

1) சமூகம் கோர்ட் இலாக்காவிற்குட்பட்ட, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமம், பெருமாள்கோவில் 2ம் தெருவில் வசித்து வந்த வைத்தியலிங்கம் குமாரர் 65 வயதுள்ள ராஜாராமன் **(இறந்தார்)**

2) சமூகம் கோர்ட் இலாக்காவிற்குட்பட்ட, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமம், பெருமாள்கோவில் 2ம் தெருவில் வசிக்கும் ராஜாராமன் குமாரர் 43 வயதுள்ள செந்தில்.

3) சமூகம் கோர்ட் இலாக்காவிற்குட்பட்ட, மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமம், பெருமாள்கோவில் 2ம் தெருவில் வசிக்கும் கணேசன் மனைவி 67 வயதுள்ள ஜானகி.

4) சமூகம் கோர்ட் இலாக்காவிற்குட்பட்ட மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமத்தில் வசிக்கும் ராஜாராமன் குமாரர் 39 வயதுள்ள கதிரவன்.

5) சமூகம் கோர் இலாக்காவிற்குட்பட்ட தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமத்தில் வசிக்கும் ராஜாராமன் குமாரத்தியும், குமார் மனைவியுமான 45 வயதுள்ள பானுமதி

6) சமூகம் கோர் இலாக்காவிற்குட்பட்ட தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமத்தில் வசிக்கும் ராஜாராமன் குமாரத்தியும் சக்திவேல் மனைவியுமான 41 வயதுள்ள கலாராணி ..... பிரதிவாதிகள்

(இ.ம.எண்.189/2023ல் கடந்த 14.08.2023 தேதியிட்ட உத்தரவுப்படி பிராது திருத்தம் செய்யப்பட்டுள்ளது. )

வழக்கு சொத்தை வாதி அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதிகளோ, அவர்களை சார்ந்தவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வாதியால் இந்த வழக்கானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கு தாக்கலான நாள் – 20.01.2016
இவ்வழக்கு கோப்பிற்கு எடுக்கபட்ட நாள் – 20.01.2016
இவ்வழக்கின் வழக்குமூலம் – 09.01.2016 திருக்கடையூர் கிராமத்தில் உற்பத்தி.

இவ்வழக்கின் நீதிமன்ற கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்குமாக ரூ.1,000/– என மதிப்பிட்டு அதற்கு நீதிமன்றக்கட்டணமாக ரூ.75.50 நீ.ம.க.ச பிரிவுகள் 27(c) ன் படி செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கானது 20.01.2016 அன்று O.S 07/2016 என மாண்புமிகு சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு பின்னர் இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு 30.11.2019 அன்று O.S 168/2019 என இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனைக்கு இருந்து வந்து 06.04.2026 அன்று என்முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது வாதி தரப்பில் வழக்கறிஞர்

திரு. K. சங்கரன், அவர்கள் ஆஜராகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு. A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், 3ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. J. பாரி அவர்கள் ஆஜராகியும், 4,5,6 பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் கடந்த 13.03.2023 அன்று தோன்றாத்தரப்பினர்களாக்கப்பட்டும் இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும் வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களை பரிசீலனை செய்த பிறகு இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

## தீர்ப்பாணை

1) தாவா 2 வது அயிட்ட சொத்தை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தீர்ப்பாணையிடப்படுகிறது.

2) தாவா 1வது அயிட்ட சொத்தை வாதி அனுபவித்து வருவதை பிரதிவாதிகளோ, அவர்களை சார்ந்தவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என வாதி கோரிய நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு அளித்தும் வாதிக்கு ஆதரவாக தீர்ப்பாணையிடப்படுகிறது.

3) இறுதியாக இந்த வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டு செலவுத்தொகையில்லை என்று தீர்ப்பாணையிடப்படுகிறது.

## சொத்து விபரம்:-

மயிலாடுதுறை பதிவு மாவட்டம், தரங்கம்பாடி சார் பதிகவத்தை சேர்ந்த தரங்கம்பாடி தாலுக்கா, திருக்கடையூர் கிராமம், பெருமாள்கோவில் இரண்டாம் தெரு

1. புல எண்.432/11 நத்தம் மனை 254 சதுர மீட்டர்
2. புல எண்.432/4G புஞ்சை 0.09.2/3 செண்ட்.

இதில் உள்ள தற்போதைய எண்.3/60B இலக்கமிட்ட கூரை வீடு உட்பட. மின்னிணைப்பு எண்.811.

இரண்டு அயிட்ட சொத்துக்களும் கீழ்கண்ட ஒரே நான்கெல்லைக்குள் உள்ளது.

இரண்டாம் தெருவிற்கு தெற்கு, இந்திராணி மனைக்கு கிழக்கு, பிரதிவாதிகள் வீடு, மனைக்கு மேற்கு, ராமலிங்கம் மனைக்கு வடக்கு.

**<u>வாதி தரப்பு செலவு விவரப்பட்டியல்</u>**

செலவுத்தொகை பட்டியல் வாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (இவ்வழக்கு செலவுத்தொகையானது ரூ. 835 /– ஆகும்.)

| விபரப்பட்டியல் | ரூ.பை |
|---|---|
| வழக்குரை நீதிமன்ற கட்டணம் | 75.00 |
| வக்காலத்து | 10.00 |
| தட்டச்சு கட்டணம் | 250.00 |
| வழக்கறிஞர் கட்டணம் சீனியர் | 250.00 |
| வழக்கறிஞர் கட்டணம் ஜூனியர் | 250.00 |
| கூடுதல் | 835.00 |

என் கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15 ம் நாள் இடப்பட்டது.

(ஒப்பம்) P. கனிமொழி,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

தரங்கம்பாடி